1

# முதன்மைக் கண்காணிப்பாளர்

# உழைப்பூதியம் உயர்த்தி வழங்குதல் – ஆணை

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – மேல்நிலைத் தேர்வு – முக்கிய பாடத் தேர்வுகள் – வேற்று பள்ளி தலைமையாசிரியர் / முதல்வர் – முதன்மைக் கண்காணிப்பாளராக நியமனம் செய்தல் – உழைப்பூதியம் உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (வி1) துறை

அரசாணை (நிலை) எண்.88

நாள் : 13–04–2007.

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.117, பள்ளிக்கல்வி (வி1) துறை, நாள் : 17–7–2006.
2. அரசாணை (நிலை) எண்.31, பள்ளிக்கல்வி (வி1) துறை, நாள் : 6–2–2007.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண். 1907/எச்–1/2006, நாள் : 14–2–2007.

**ஆணை:**

அரசுத் தேர்வுகளை திறம்பட நடத்துவதற்கு ஏதுவாக, பொதுத் தேர்வுகளின் முன்பணி மற்றும் தேர்வுக்காலப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த உழைப்பூதியம் மற்றும் ஒட்டு மொத்த மதிப்பூதியம் ஆகியவற்றை மார்ச் / ஏப்ரல் 2006 பொதுத் தேர்விலிருந்து உயர்த்தி மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி, ஆணை வெளியிடப்பட்டது. இதில் முதன்மைக் கண்காணிப்பாளருக்கு ரூ.100/–ம், எழுத்தர் பதவிக்கு ரூ.50/–ம், அலுவலக உதவியாளர் பதவிக்கு ரூ.20/–ம் என உழைப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டது. தொழிற்கல்வி சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டதால், மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் மேல்நிலைத் தேர்வுக்கான பாடங்களில், தொழிற்கல்வி சேர்க்கைக்கு கணக்கில் கொள்ளப்படும் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களுக்கான தேர்வுகள் நடைபெறும் நான்கு நாட்களுக்கு மட்டும், ஒவ்வொரு தேர்வு மையத்திலும் வேறு பள்ளியில் தலைமை ஆசிரியர் / முதல்வர், முதன்மைக் கண்காணிப்பாளராக நியமனம் செய்ய ஆணை வெளியிடப்பட்டது.

2. மேல்நிலைத் தேர்வு பாடங்களில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த 6 பாடங்களுக்கான தேர்வு நாட்களில், வேறு பள்ளியின் தலைமை ஆசிரியரை / முதல்வரை முதன்மைக் கண்காணிப்பாளராக நியமிப்பதால், அவர்கள் தேர்வு மையத்தில் முதன்மைக் கண்காணிப்பாளராக பணியாற்றும் 4 நாட்களுக்கு மட்டும்,

www.crsttp.blogspotcom

ஏற்கனவே வழங்கப்படும் உழைப்பூதியத் தொகை ரூ.100/–க்கு பதிலாக, உழைப்பூதியம் மற்றும் பயணப்படி ஆகியவற்றைச் சேர்த்து, நாளொன்றுக்கு ரூ.300/– வீதம் ஒட்டு மொத்த தொகை (Flat Rate) வழங்கலாம் என்றும், இந்த 4 நாட்களில் வேறு பள்ளியிலிருந்து முதன்மைக்கண்காணிப்பாளர் வருவதாலும், மையமாக உள்ள பள்ளியைச் சேர்ந்த எவரும் அங்கு இருத்தல் கூடாது என கருதுவதாலும், முதன்மைக் கண்காணிப்பாளருக்கு ஒத்துழைப்பளித்து பணியை முடிக்க ஏதுவாக எழுத்தர் பணிக்காக எழுத்தர் நிலையில் இருவரையும், அலுவலக உதவியாளர் நிலையில் இருவரையும் (அவர்களின் குழந்தைகள் யாரும் அம்மையத்தில் தேர்வு எழுதவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு) பணி அமர்த்தலாம் என்றும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

3. அரசு தேர்வுகள் இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. தேர்வுப்பணியில் ஈடுபடும் முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் இதர அமைச்சுப் பணியாளர்கள் அதே மாவட்டத்தில் அருகில் உள்ள வேறு பள்ளியிலிருந்து நியமனம் செய்யப்படுவதால், அவர்கள் பயணம் மேற்கொள்ளும் தூரம் குறைவாகவே இருக்கும். எனவே, அரசு தேர்வுகள் இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், கீழ்க்கண்டவாறு பணியாளர்களை நியமனம் செய்தும், இப்பணியாளர்களுக்கு பயணப்படி மற்றும் இதர செலவினங்கள் மார்ச் / ஏப்ரல் 2007 மேல்நிலைப் பொதுத் தேர்விலிருந்து கீழ்வருமாறு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | பதவியின் பெயர் | ஏற்கனவே வழங்கப்படும் உழைப்பூதியம் | உயர்த்தி வழங்க பரிந்துரைக்கப்படும் தொகை |
|---|---|---|---|
| 1. | முதன்மைக் கண்காணிப்பாளர் | ரூ.100/– | ரூ.150/– (ஒரு நாளுக்கு மட்டும்) |
| 2. | எழுத்தர் (2 நபர்கள்) | ரூ.50/– | ரூ.100/– (ஒரு நாளுக்கு மட்டும்) |
| 3. | அலுவலக உதவியாளர் (2 நபர்கள்) | ரூ.20/– | ரூ.50/– (ஒரு நாளுக்கு மட்டும்) |

4. மேற்காணும் செலவினத் தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

"2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 108 தேர்வுகள் – I திட்டத்தில் சேராதது – AA, அரசுத் தேர்வு இயக்குநர் நடத்தும் தேர்வுகள் – 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம். (த.தொ.கு.எண். 2202–02–108–3321)".

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 1137/FS(P), 2007 நாள் : 30–03–2007ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசுச் செயலாளர்.

www.crsttp.blogspotcom

# அரசுத் தேர்வுகள் தேர்வுகளின் முன்பணி மற்றும் தேர்வு கால பணிகள் உழைப்பூதியம்

**தமிழ்நாடு அரசு**

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – பொதுத் தேர்வுகள் – மேல்நிலை / எஸ்.எஸ்.எல்.சி. / ஓ.எஸ்.எல்.சி. / மெட்ரிகுலேஷன் / ஆங்கிலோ – இந்தியன் / ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு மற்றும் இ.எஸ்.எல்.சி. தேர்வுகள் – தேர்வுகளின் முன்பணி மற்றும் தேர்வுகால பணிகளில் ஈடுபடும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம் உயர்த்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (வி1) துறை

அரசாணை (நிலை) எண்.117 நாள் : 17.7.2006

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.138, பள்ளிக் கல்வித் துறை, நாள் 29.4.98.
2. அரசாணை (நிலை) எண்.88, பள்ளிக் கல்வித்துறை, நாள் 26.3.99.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.211039 / எச்.1 / 04, நாள் 20.10.05 மற்றும் 5.12.05.

**ஆணை:**

அரசுத் தேர்வுத் துறையால் ஆண்டுதோறும் 33 வகையான தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் மேல்நிலைத் தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி. / ஓ.எஸ்.எல்.சி. / மெட்ரிக் / ஆங்கிலோ – இந்தியன் ஆகிய பத்தாம் நிலை பொதுத் தேர்வுகள், ஈ.எஸ்.எல்.சி. (எட்டாம் வகுப்பு) மற்றும் ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு ஆகியன மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவற்றுள் மேல்நிலை மற்றும் 10ம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி. / மெட்ரிக் / ஆங்கிலோ – இந்தியன் பொதுத் தேர்வுகள்) ஆண்டிற்கு மூன்று முறையும் ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு மற்றும் இ.எஸ்.எல்.சி. தேர்வுகள் ஆண்டிற்கொரு முறையும் நடத்தப்படுகின்றன.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அனைத்து பொதுத் தேர்வுகளின் முன்பணிகள் மற்றும் தேர்வு நாட்களில் தேர்வு பணியில் ஈடுபடும் தலைமைக் கண்காணிப்பாளர் மற்றும் இதர பணியாளர்களுக்கும், இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, முதன்மைக் கண்காணிப்பாளருக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பிறநிலை பணியாளர்களுக்கும் உழைப்பூதியம் நிர்ணயிக்கப்பட்டு 7 ஆண்டுகள் கடந்த நிலையில், அரசுத் தேர்வுகள் திறம்பட நடத்துவதற்கு ஏதுவாக தேர்வுப்பணி மேற்கொள்ளும் மைய முதன்மைக் கண்காணிப்பாளர், ஆசிரியர் மற்றும் இதர பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உழைப்பூதியத்தை உயர்த்தி வழங்குமாறு அரசு தேர்வுகள் இயக்குநர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனத்துடன் பரிசீலித்து, பொதுத்-தேர்வுகளின் முன்பணி மற்றும் தேர்வுக்காலப் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் உழைப்பூதியம் மற்றும் ஒட்டு மொத்த மதிப்பூதியம் ஆகியவற்றை மார்ச் / ஏப்ரல் 2006 பொதுத் தேர்விலிருந்து கீழ்வருமாறு உயர்த்தி வழங்க முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

www.crsttp.blogspotcom

## தேர்வு பணிகளுக்கான உழைப்பூதியம்

| வ.எண். | பணியாளர் பதவி | ஏற்கனவே வழங்கப்படும் உழைப்பூதியம் ரூ. | உயர்த்தி வழங்கப்படும் உழைப்பூதியம் | |
|---|---|---|---|---|
| | | | மே.நி / ஆ.க.ப. ரூ. | இ.நி. / மெட்ரிக் ஆ.இ.தே ரூ. |
| 1. | தலைமைக் கண்காணிப்பாளர் / கூடுதல் தலைமைக் கண்காணிப்பாளர் | 15/– | 100/– | 80/– |
| 2. | எழுத்தர் | 9/– | 50/– | 40/– |
| 3. | அலுவலக உதவியாளர் | 6/– | 20/– | 20/– |
| 4. | தண்ணீர் வழங்குபவர் | 5/– | 15/– | 15/– |
| 5. | பெருக்குபவர் | 5/– | 15/– | 15/– |
| 6. | துப்புரவாளர் | 5/– | 15/– | 15/– |
| 7. | செய்முறைத் தேர்வு:<br>1. திறமை வாய்ந்த உதவியாளர் | 10/– | 30/– | 20/– |
| | 2. ஆய்வக உதவியாளர் | 6/– | 30/– | 20/– |
| | 3. உள்புற / வெளிப்புற தேர்வாளர் (Aural / Oral Examiner) | 3/– | 3/– | 3/– |

## தேர்வு பணிகளுக்கான மதிப்பூதியம்

| வ.எண். | பணியாளர் பதவி | மேல்நிலை / ஆசிரியர் கல்வி பட்டயத் தேர்வு | | | | இடைநிலை / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியன் தேர்வு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஏற்கனவே வழங்கப்படுவது | | உயர்த்தி வழங்கப்படுவது | | ஏற்கனவே வழங்கப்படுவது | | உயர்த்தி வழங்கப்படுவது | |
| | | உள்ளூர் | வெளியூர் | உள்ளூர் | வெளியூர் | உள்ளூர் | வெளியூர் | உள்ளூர் | வெளியூர் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| 1. | துறை அலுவலர் | 50/– | 80/– | 70/– | 100/– | 40/– | 60/– | 50/– | 80/– |
| 2. | கூடுதல் துறை அலுவலர் | 50/– | 80/– | 70/– | 100/– | 40/– | 60/– | 50/– | 80/– |

www.crsttp.blogspotcom

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | வினாத்தாள் கட்டுக்காப்பாளர் | 40/– | 60/– | 60/– | 80/– | 30/– | 50/– | 40/– | 60/– |
| 4. | தேர்வுக்கூட மேற்பார்வையாளர் | 40/– | 60/– | 60/– | 80/– | 30/– | 50/– | 40/– | 60/– |
| 5. | பறக்கும்படை உறுப்பினர் | 50/– | 80/– | 60/– | 80/– | 40/– | 60/– | 40/– | 60/– |

4. மேற்காணும் செலவினத் தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்:–

"2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 108 தேர்வுகள் – 1 திட்டத்தில் சேராதது – AA. அரசுத் தேர்வு இயக்குநர் நடத்தும் தேர்வுகள் – 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02. ஊதியம்". (து.தொ.கு.எண். 2202 – 02– 108 – AA 3321).

5. இச்செலவினம் 'புது துணைப் பணித் திட்டமாகக்' (New Instrument of Service) கருதப்படும். இச்செலவினம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தினை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.தி.பொ.I)த் துறையில் பிறப்பிக்கப்படும் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதி (வ.செ.தி.பொ.I)த் துறைக்குத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 41525/Edn.II/06, நாள் 13.7.06ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கம் பேரேடு எண்.280.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசுச் செயலாளர்.

www.crsttp.blogspotcom